

# காளியம்மன் காவியம்

## கும்மிப் பாடல்கள்

தொகுப்பாசிரியர்
கலாபூஷணம் நாகமணி விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# காளியம்மன் காவியம்
# கும்மிப் பாடல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



ஓம் லம்போதராய நமஹ
திருச்சிற்றம்பலம்

### காப்பு

கரும்பு மிளநீரும் காரெள்ளும் செந்தேனும்
விரும்பு மவல் பலவு மென்மேல் - அருந்திக்
குணமடைய ராய்வந்து குற்றங்கள் தீர்க்கும்
கணபதியே யிக்கதைக்குப் காப்பு.

### அகவல்

# காளியம்மன் காவியம் கும்மிப் பாடல்கள்

தொகுப்பாசிரியர் :

**புலவர் நாகமணி விநாயகமூர்த்தி**

ஈஸ்வரி வெளியீடு - 24
10-09-2016

விலை: 350

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை



**பெரியோர்களே!**

அண்ட சராசரங்கள் எங்கணும் வியாபித்து விளங்குகின்றவள் அன்னை ஆதிபரா சக்தியாகும். இச்சக்தியின் அற்புத விளையாட்டுகள் பல. அவற்றுள் தீயவை அழிக்கும் கோப சக்தியாகவும் வரமருளும் துர்க்கையாகவும் அன்னை காளிகாதேவி அருள் பாலிக்கின்றாள். முன்னொரு சமயம் கயிலாயத்தில் பரமசிவனுக்கும் உமையான பார்வதிதேவிக்கும் விவாதம் ஏற்பட்டு சத்தி இன்றேல் சிவமில்லை எனச் சிவன் கூற சக்திதான் பெரிதென பார்வதிதேவி பகர இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டன. சத்தியும் சிவமும் ஒன்றோடொன்று உறவு இல்லையேல் உலகத்தில் எவ்வியக்கமும் நடைபெறாதென்பதை உணர்த்தவே ஈசன் எம் பார்பதி தேவியை காளிகா தேவியாகச் சபித்து விட்டார். உடனே உமை தன்னை சபித்த மகேஸ்பரனிடம் பாவவிமோசனம் கேட்கலானாள். தேவி உன்னை அகோர வடிவமான காளியாக ஆக்கினோம். வரும் யுகத்தில் அசுரர் குலத்தால் தேவர் முனிவர்களுக்கு இம்சை ஏற்பட இருக்கின்றது. ஆகவே தேவர்களைக் காத்து அதர்மத்தை அழித்து தர்மம் தளைக்கச் செய்து மீண்டும் எம்மிடம் வந்தடைவாயாக என்பரமசிவன் திருவாய்மர்ந்தருளினார். ஈங்கிது நிற்க.

**அன்பர்களே!**

இப்புண்ணிய பூமியில் காளிகா தேவியின் பல தலங்களுண்டு. அவற்றுள் கிழக்கு மாகாணத்தில் பிரசித்தி பெற்ற தலங்களாக திருகோணமலைப்பதி மட்டக்களப்பில் புன்னைச்சோலை, ஏறாவூர், போரதீவுப்பதியும் சேனைக்குடியிருப்பு தென்முகக் காளியன்னையும் குறிப்பிடலாம். அடியார்களே, இவ்வன்னையின் அகவல் காவியம் தாலாட்டு கும்மிப்பாடல்களை இசையோடும்பாடி பல தெய்வங்களை மகிழ்விக்கலாம். இப்புத்தகத்தில் இடம்பெறும் பாடல்களின் உசாத்துணையாக. திவ்விய கரணியில் இருந்து அகவல் காவியம் தாலாட்டும் திருமலைக்காளியின் பாடல் திரு வேற்பிள்ளை அவர்களின் ஆக்கமான, இப்பாடலை வாழையூற்ற நிலாவெளியில் குடிபதியாக வாழும் நவரெத்தினம். செல்வராசா ஆகிய அன்பர் தந்துதவியும் அடியேனின் ஆக்கமான அகவல் தாலாட்டு கும்மிப்பாடல்கள் இடம் பெறுகின்றன. எனவே பாடும் பெரியோர் பழிந்துரையாது காளி அம்மையின் அருளைப் பெறவும் நமது இளைய தலைமுறையினருக்கு இத் தொகுப்பு ஏதுவாய் இருப்பதோடு அடியேனையும் ஊக்கப்படுத்தி காளிகா தேவியின் கடாட்சம் பெறுவீராகவும்.

சேனைக்குடியிருப்பு.
10-09-2016

அன்புடன்
தேவிபக்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## சக்தி காயத்ரி

*திருச்சிற்றம்பலம்*

ஓம் ஐயும் கிலியும் விசுத்தியுன் மகேவாகு வேகுதாய
திமிகி தன்னோற் ஐயும் சக்திப் பிறசோனாதயாதூ
ஓம் கிலியும் தேவி காயாஸ்த்திரி சந்தாஈஸ்பரி தேவதாம்

### அகவல்

அரிஅரி காளி அட்சர காளி
திரிபுர கயிலையிற் சென்றிருந் தவளே
பொங்குகட லேழையும் போக்கவரங் கேட்டவளே
பொய்கையில் லாத புவனக் கடலில்
உதிரமா காளி உருவேறு திருவேறு
ஒருநொடியிதலிலோடி வாடிமா காளி
பொன்னேர் முலையாளே புரிச்சடை யணிந்தவளே
அரனைக் கண்டு அவர்மடி பிடித்தவளே
சுடலையி லாடியகாளி பாடிய சூலி
சூரசங்காரி கடலையிற் பேச்சி மீகாமி
விரித்த சடைச்சி வீரிகெங் காளி
மேகாமீ புலித்தோ லுடுத்த விடைச்சி
வெண்மையுள் ளவளே வில்லம்புள் ளவளே
வெள்ளிமண்டபத்தில் வீற்றிருந் தவளே
உறுத்திய பார்வையும் உதிரநற் சூழலும்
விரித்த சடையும் விளங்கிய பல்லும்
அணிந்த நீறும் ஆதித்த னொளியும்
திறந்த மேனியுந் திக்கெங்கும் பார்வையும்
விளித்த விழியும் சிரித்த முகமும்
எரித்த பார்வையும் எக்கிய வயிறும்
தூக்கிய பாதமும் துணுக்கென வெழுந்து
வாறாள் காளி வாற வடிவைப் பாராய்
பாராய் பாராய் பயமிலா வுளத்தொடு
இடது புறத்திலே யியம ராசனும்
வலது புறத்திலே பரமேசு பரனும்
முன்னேமும் மூர்த்திகளும் பின்னேகின் னர்களும்
கோடிவயி ரவருங் சுறுபரி கலமும்
கன்னிமா ராயிரவர் கலந்துமே சூழ்ந்திடவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலாத்தி யேந்திடவும் அம்மானை ஆடிடவும்
அகில மெங்கும் அகிற்புகை வீச
அரகர சிவசிவ அட்சர காளி
திரிபுர சங்கரி திகளொளி சங்கரி
புரிபுர சங்கரி பவனொளி சங்கரி
பாடிய காளி பரமேசு பரியே
கண்ணன் சகோதரி கங்காள ரூபி
மாகி மாதங்கி மாயா சொரூபி
மாய்கையுள் ளவளே மார்ப்பமுடை யவளே
வன்னமா மயிலே வரத்திற் பெரியவளே
கொங்கைக்கரையி லிருந்தவளே கேட்டபெலி கொண்டவளே
கோயிலி லிருந்தவளே கோதரி தீர்த்தவளே
கோபாலன் தங்கையரே கோப முடையவளே
அகோர காளி அழலம் பகத்தி
சுடலையில் நடத்தி சூட்சாசூட் சத்தி
தில்லையில் சிவனுடன் திருநட னம்புரியும்
வல்லவி காளி மறைமுதல்த் திருவே
தக்கன் மகளாய்த் தவமது புரிந்து
அக்கர வணிவோன் அருள்தனை யடைந்து
மனைவியா யுமைந்து மமதையால் தக்கன்
இனியதோர் யாகம் இயற்றுவ தறிந்து
அவ்விட மடைந்து யாகம துளித்த
சங்கரி காளி சடுதியில் வாவா
வராகி மாதங்கி மாயா சொரூபி
பராபரி நிராதரி பச்சைமால் தங்கையே
வாவா வந்து மலர்மர மேறி
ஆவேச மாகியுன் அன்புதா காளி
ஐயுங் கிலியு மாகிய காளி
சௌவும் மௌவு மாகிய சக்தி
வாவா காளி மலரடி பணிந்தேன்
தாதா வரங்கள் தந்தருள் காளி
தாயே யுனது சரணம் பணிந்தேன்
வாவா வீசு வரந்தா காளி
நானுன தடிமை நீயுமென் தெய்வம்
சரணம் சரணம் தாயே சரணம்
நமஸ்தே நமஸ்தே நமஸ்து.
– சுபம் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்திரகாளி அகவல்

### காப்பு

அன்னை என் பத்திரகாளி அம்மனின்மீதுயான்
திண்ணமாய் தமிழ் செப்பும் அகவற்கு - தன்னைநிகர்
வாரண ம தான புகள் ஆரணன் உமை மகன்
காரணக்கழிற்று கஜானன் காப்பு

### அகவல்

அம்மா உன் தாழ் அன்புடன் பணிந்தேன்
இம்மானிலத்தோர் இகழ்ந்துறை செய்யா
நீயே துணை என நின்றேன் தாயே
அன்னையே அகவல் அன்புடன் ஏற்றருள்

அடியமதழிக்கும் அங்குசக்கையும்
பயமேதகற்றும் பத்திரகாளி
வில்லும் வாளும் வெண்ணிறமாலையும்
சூலமும் கையும் சுடர் போல் துலங்க
அள்ளும் பவள அழகு மேனியும்
துள்ளும் கயலின் சுந்தரக் கண்ணும்
தன்டையும் தாழும் தங்கக் கொலுசுங்
வண்டு நுகரா வளர்ந்திடு சடையும்
புருவ நடுவில் பொன்நொளி வீசும்
திலகம் சென்நிற அணியும் தாயே
குஞ்சிச் சிரிப்பும் கொங்கைகள் இரண்டும்
மருவும் மாதுள மாநிற மேனி
நிறைந்த மாலைகள் நீடு கழுத்தில்
சரங்கள் அணிந்த சங்கரன் துணைவி
சூரிய சந்திர துளங்கும் தோடும்
இருகாததனில் இலங்கிட வீச
ஆடை அழகை அடியேன் புகள
முடியா தம்மா முத்துச் சரப்பணி
சென்னிறச் சேலை சித்திர வடிவு
கரைகள் தகதக வென கண்ணை மறைக்கும்
நீண்ட மூக்கில் நிறைந்த மூக்குத்தியும்
கோபங்கள் அற்ற குளிர்ந்த முகமும்
வண்டாகுழலி மறைநான் கிற்கும்
பெரியானவளே பேரிடும் காளி
உன்னைப் புகழ்ந்தேன் ஓடிவாதாயே
காலிற் சிலம்பு கலீர் கலீரென
கூவிக் குதித்து குணமாய் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்தன் வரவால் உள்ளம் மகிழ
தந்தையும் நீயே தாயும் நீயே
முந்தை முதலும் முடிவும் நீயே
கனலும் நீயே காற்றும் நீயே
அனலும் நீயே அசைவும் நீயே
புவன மனத்தும் பெற்றவள் நீயே
சிவனை எதிர்த்த சேயிளை நீயே
அணையாவிளக்கின் அமர்ந்தவள் நீயே
இருளும் ஒளியும் எல்லாம் நீயே
பகரும் பாடல் பண்ணிசை நீயே
அகர உகார அனாதியும் நீயே
சுடலையில் ஆடும் சுந்தரி நீயே
எல்லாம் ஆன இறைவி வருக
வருக வருக மாயோன் சகோதரி
வருக வருக மக்கா தேவி
வருக வருக மலையாள பகவதி
வருக வருக வடபத்திர காளி
வங்கக்கடலை வாரிச் சுருட்டி
சிங்கத்தேறிச் சீக்கிரம் வருக
திங்கள் அணியும் சிவனின் துணைவி
வங்கறிங்ங வராகி வருக
சாமக் கோழி தாயே கூவுது
வாமக் குளவி வைரவி வருக
சேமக் குழலே சித்தே வருக
திரிபுர தகனி சீக்கிரம் வருக
பரிபுர பவானி பராசக்தி வருக
அறியு மிறியும் அம்மே வருக
கட்டி இருக்கான் கலங்கி நிற்கிறேன்
எட்டி உதைத்திடு இத்தடை அறுபட
தடையது தெறிக்க தலையது உருள
உறுட்டி மிதியடி ஓம் றீங் வாராகி
உருவிய வானால் ஓங்கித் தடை அறு
எதிரி பக்கம் இணங்கி நில்லாதே
பெலியைக்கண்டு பெருமை கொள்ளாதே
ஆவேசம் கொண்டு அவனைத் துரத்து
துரத்தி அடி பிடி துஸ்டப் பசாசை
அம்மா இம்மனை அனாதியாய் வாழும்
பில்லி சூனியம் பேயும் பிசாசும்
தொல்லைகள் புரியும் துஸ்டத் தேவதை
கல்லால் எரியும் காடேறி இருளன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனையில் புதைத்த மாறாச் செய்வினை
எல்லாம் பொடிபட இம்மனை வருக
உந்தன் வரவால் ஓடிட வறுமை
செல்வம் செலிக்க சீதேவி வருக
கல்வியும் பொறும் காளி தருக
மனையும் மக்கள் மட்டுற வாழ
துணை நீ புரிவாய் துதித்தேனம்மா
அணையாவிளக்கே ஆத்தா சரணம்
வினையை அகற்றும் வித்தகி சரணம்
பஞ்சாத் சரத்தி பார்வதி சரணம்
குஞ்சரன் தாயே கோதாய் சரணம்
கந்தனை அணைத்த காமாட்சி சரணம்
மாரி மகேஸ்வரி மாதா சரணம்
வீரம்மா காளி வெல்லிடும் பேச்சி
சூர சங்காரி துரந்தரி வீரி
நீலி கபாலி நிந்தாழ் சரணம்
உன்னைத்துதிக்கும் உத்தமர் இடர் பிணி
எல்லாம் அகற்றி இன்புற்றோங்க
நல்ல வரமருள் நாயகி போற்றி
வல்லமை தருவாய் வட பத்திர காளி
பத்தினி உந்தன் பாதம் போற்றி
போற்றி போற்றி உந்தன் பொன்னடி போற்றி
சிவ சிவ போற்றி சிவாயா போற்றி
ஆதி அன்னையே அம்மா போற்றி
எங்கும் நிறைந்த ஏக ஒளியே
பொங்கும் புவனம் போற்றுமென் அன்னையே
இங்கு எழுந்து எம் குறைதிர்த்து
நீடு புகழும் நில் நல்ல மனமும்
ஆசைகள் அற்று அறப் பணி புரிய
என்னைவைத்தருள் எந்தாய் சரணம்
சரணம் சரணம் தாயே சரணம்
காளி கங்காளி கழலடி சரணம்
வீரம்மா காளி வேந்தே சரணம்
குருவே பாலா நந்தா சரணம்
சரணம் சரணம் சிவ நம சரணம்
சரணம், சரணம் ஓம் சிவ சரணம்

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காளியம்மன் காவியம்

1\. அரியட் சரத்தி திரிசூலி ஓங்காரி
அபிராமி மகமாரி யானகெம் பீரி
திரிபுர சதானந்தி சம்பூர் நகர்பதி
செழிக்கவரு தேவிபத் திரகாளி தன் மீது
தெரிதமிழி னன்புசெறி காவியமி யற்றத்
தெரிகரட கரிமுகமு மழகுவெண் கோடும்
வருகரட விகடதட மனையகுட வயிறன்
மலரடிக ளனுதினமு மனதிலய ரேனே.

2\. அவ்வுநவ் வுஞ்சவ்வு மானகெம் பீரி
அம்மைபத் திரகாளி மீதுதமி ழோத
மவ்வுமுவ் வுஞ்சிறிய மானசிவ பரனும்
மாதுமையும் மவரயனும் வள்ளிகா தலனும்
உவ்வுக்கு றிங்கார மானசிவ பரனும்
ஓதரிய கலியாண வீரபத் திரனும்
சவ்வுநவ் வும்பவ்வு மானகண் ணகையுந்
தாமரையில் மங்கலரு மேதுணைய தாமே.

3\. ஆதியந் தரிகெவுரி யானகெம் பீரி
அரலோக பரலோக அரிசகோ தரியாள்
பாதிமதி சூடியுட றாடுமக மாயி
பரலோக சிவலோக நவலோக காளி
சோதிசங் கரிதுர்க்கை யருள்சிங்க வாகினி
துய்யமகி டாசுரன் சிரநடன வீரி
நீதிசெறி மானிடர்கள் நோய்பிணிய கற்றவரு
நேசமுறு வீரபத் திரகாளித் தாயே.

4\. இந்துமதி குடியுட னேசுடலை தன்னில்
இன்பமுடனே நடன மாடுமக மாயி
கந்தனோடு கரிமுகன் தன்னையருள் தேவி
காரணிவ ராகிகலை யேறுசிவ காளி
விந்தைசெறி முக்கண்ணி வேதவே தாந்தி
விமலதிரி புரகமல விழியாயி ரத்தி
சந்தமிகு பாடல்புனை அடியார்செ ழிக்கவரு
தாயான வீரபத் திரகாளித் தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஈசனொடு முப்பத்து முக்கோடி தேவரும்
இரு ஷிகின் னரர்முனிவ ரெண்டிசையுள் ளோரும்
தோகையே நின்னடி பணிந்துநின் றேத்தச்
சுருதியுட னெசுடலை தனில்நடன மாடி
வாகையுட னெட்டுக்க ரத்திலா யுதமும்
வகையாக வெபிடித் தசுரரைவ தைத்த
தோகையே அடியவர்கள் நோய்பிணிதொ லைக்க (வருக)
சூலியே வீரபத் திரகாளித் தாயே

6. உம்பர்தொழு பசுவதி பாம்மணிம னோகரி
உத்தண்ட கெம்பீரி வீரிஓங் காரி
சம்புறுச டாட்சரி மாதங்கி திரிசூலி
சாலோக சாமீப சாயுட்ச தேவி
நம்பின வர்க்குதவ நாரிபர கௌரி
நளினகெறு விதயோக கமலகா மாட்சி
கொம்புகுழல் பலதொனிமு ழங்கிடுங் கோவிலுறை
கோதையே வீரபத் திரகாளித் தாயே.

7. ஊழிகா லத்திலொளி யானசிவ சத்திநீ
ஓங்கார றிங்கார மானசிவ சத்திநீ
தாழ்பணிய வர்க்குருள்கொ டுத்தசிவ சத்திநீ
சாரூப மாகவே தான்முதலி ருந்தநீ
வாழ்புவன வாலைதிரி புரகமல சத்திநீ
மாதவன் தங்கைநீ மதியினொளி யானநீ
காளிநீ யுன்னடியவர் உயர்வடைய வேண்டியசெய்
கன்னியே வீரபத் திரகாளித் தாயே.

8. எட்டெட் டறுபத்து நாலுகலை யானநீ
ஈசுபரி யாகவே வடவையை எரித்தநீ
முட்டவே மதுமாகி ஷத்துணி யானநீ
மோதுகட லேலையும் முன்னேகு டித்தநீ
துட்டப்ப சாசிகளை வெட்டியே வென்றநீ
சுடலையிட் பேச்சியுரு வாய்நடன மிட்டநீ
கட்டழகி யுன்னடியர் செல்வஞ்செ ழிக்கவரு
காளியே வீரபத் திரகாளித் தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. ஏகபர னாரிடமு றைந்தாய்ந மோநமோ
இடர்பிணிகள் துயரகல வந்தாய்ந மோநமோ
நாகச டாட்சரியு மானாய்ந மோநமோ
நாலிரண்டாயுதமெ டுத்தாய்ந மோநமோ
வாகனைய தக்கனைவ தைத்தாய்ந மோநமோ
வருபூதப் படையழகி யானாய்ந மோநமோ
பூகமுயர் நாடுநகர் அடியார்செ ழிக்கவரு
பூவையே வீரபத் திரகாளித் தாயே.

10. ஐயனுட னேயிருள னானசிவ மருளன்
ஆடிவரு காடேறி யாதிவயி ரவரும்
துய்யவிறு மன்வீர முண்டனொடு பரிகலஞ்
சூழவே நரர்கொழுவ மர்ந்தினிதி ருந்து
வையமதில் மானிடர்கள் நோய்பிணிய கற்றியே
வருபூசை பெலிபூசை தானுகந் தருளும்
தையலே யடியாரை வாழ்விக்க வருகின்ற
தாயான வீரபத் திரகாளித் தாயே.

11. ஒளியாய் முதற்சத்தி யாயிருந் தாயே
உலகோர்கள் பிணிதீர வருள்புரிந் தாயே
தெளிவான முக்கோண மீதுறைந் தாயே
சிவனாரி டப்பாக மாயிருந் தாயே
களிகூர நின்கிருபை காட்டவந் தாயே
அளிமீறி யிசைபாடு மடியார்கள் துயர்தீர்க்க (வருக)
மம்மையே வீரபத் திரகாளித் தாயே.

12. ஓதுபரை யானசிவ சக்திசி வாயநம
ஓங்கார மாறாத ஒளியேசி வாயநம
நாதவொளி யானசிவ தாயேசி வாயநம
நாதாந்த மானமெய்ப் பொருளேசி வாயநம
வேதவே தாந்தியென வந்தாய்சி வாயநம
விண்ணுமண் ணும்புவலு மானாய்சி வாயநம
சோதியே யடியாரை வாழ்விக்கு மண்புடைய
தோகையே வீரபத் திரகாளித் தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ஔவுநவ் வுஞ்சௌவு மானாய்சி வாயநம
ஐயுங்கிலி யுங்கிறியு மானாய்சி வாயநம
சௌவுமை யுங்கிலியு மானாய்சி வாயநம
சகலகலை யாகம மானாய்சி வாயநம
பவ்வுமுவ் வுஞ்சிறியு மானாய்சி வாயநம
பரவைபுனல் வற்றக்கு டித்தாய்சி வாயநம
கொவ்வையித ளன்னையே வந்தவினை நீங்கிடுங்
கோதையே வீரபத் திரகாளித் தாயே.

14. அஃகர மணிந்துநட மாடிநின் றாயே
அன்றுமகி டாசுரனை வென்றுவந்தாயே
சக்கரம ணிந்தமால் தங்கையென் தாயே
சண்முகன் தந்தையு மாகிநின் றாயே
தக்கபுகழ் செல்வங்கள் தயிரியம் பெருவாழ்வு
தந்துனது அடியாரை ரட்சியுந் தாயே
தக்குமத கருவிபாய் செந்நெல்வயல் மிகவிளைய
வருள்செய்வாய் வீரபத் திரகாளித் தாயே.

15. ஏர்வாழி மறைவாழி யடியார்கள் வாழி
யீரேழு புவனமும் வாழிமிக வாழி
பார்வாழி மன்னர்செங் கோல்நிதம் வாழி
பஞ்சாட்ச ரத்துடன் பாவையர்கள் வாழி
கார்வாழி மட்டக் களப்புநகர் வாழி
காசினியி லித்தழிழை யோதினோர் வாழி
சீர்வாழி சம்பூர்ந கர்ப்பதிக் கோவிலுறை
தேவிபத்ர காளிபதம் வாழவா ழியதே.

- சுபம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காளியம்மன் பஞ்சகம்

1. கங்கைமதி தங்குசடை யுங்கமல மங்கையுயர்
கஞ்சமலர் தும்பையொடு கொண்டையி லணிந்து
சங்கைசெறி வண்புலி யுரித்தரை போர்த்துத்
தங்குமர வம்புனையுஞ் சங்கரனோ டுண்டு
துங்கநட னம்புரியு மங்கைதிரி சூலி
சுந்தரிச வுந்தரிது ரந்தரிப தத்தை
இங்கிதமு டன்பணிய வென்றுமருள் மேவு
மின்பமுறு தும்பிமுக வன்துணைய தாமே.

2. வண்டிசைகள் கண்டுகுயில் நின்றிசைகள் பாட
மண்டலம திர்ந்திடவ லம்புரிமு ழங்க
வெண்டிசையி லுள்ளவர்கள் நின்றுமலர் தூவ
வீசனுட னேதில்லை யம்பலந் தன்னில்
அண்டருட னேமுனிவர் தொண்டர்கள் துதிக்க
அன்பினுடன் வாணர்கை மத்தளமு ழங்கத்
தண்டையொடு கிண்கிணிசி லம்புநட மாடுஞ்
சத்திமா காளிபதம் நித்தமய ரேனே.

3. அயிராணி திருமாது அயிலோக தேவி
அன்னபரி பூரணி ஆனந்த ரூபி
பேய்யுடனாடி யிசை பாடவே சுடலைதன்னில்
பிரியமுட னுரியநட மானதுபு ரிந்த
பயிரவிசெ ழும்பவள வாயிதழ்முக் கண்ணி
பலகலையி னொளியனைய வகிலமுழு துடையாள்
செயல்மருவு மடியவர்கள் பிணிதொலைத் தருளவரு
தேவிமா காளிபத மேதுதிசெய் வோமே.

4. நித்தபரி பூரணி சத்துருசங் காரணி
நிற்குமருள் பாகரி சற்குருத யாபரி
உத்தமவு தாரணி சத்திசிவ நாரணி
உற்றபரி பூரணி முத்திதரு காரணி
வித்தகவி னோதரி மத்தணிம னோகரி
வெற்றிகிரு பாகரி புத்திதரு பூரணி
சுத்தமுயர் சூரசங் காரியோப காரி
தோகைமா காளிபத மேதுதிசெய் வோமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஆதியயி ராமிகெவு மாரிதிரி சூலி
அரலோக பரலோக ஆனந்த ரூபி
சோதிமகா தேவிமா காளிரண சூலி
தோடவிழ நிர்த்தருட னாடுபர தேவி
வேதனைகள் நோய்பிணிகள் தீரவரு மாரி
மேவரிய பேச்சியென் தாயனைய சத்தி
பாதமல ரேதுணைய தாகவருள் தருவாய்
பாரிலுயர் வீரபத் திரகாளித் தாயே.

## திருகோணமலை பத்திரகாளி அம்மன் பேரில் காவியம்

1. அகில மிசை அழகு செறி கோணையாம் பதியில்
ஆடவர்கள் கூடிவிலையாடு முற்றவெளியில்
மகிழ்வினொடு அரசடியினருகிலிருக்கும்
மடமாது காளிதன்மீது செந்தமிழால்
கதிபெற நற் காவியம் கழற அருள் புரியும்
கயமுகனே உனை மனதில் அனுதினம் நினைந்தேன்
பதியென நல் ஆலடியில் வீற்றிருக்கின்ற
வல்ல விக்னேஸ்பர ரே வரமருளுமையா.

2. ஆதியாய் இவ்வுலகை ஆள நீ வந்தாய்
அடியவர்கள் ஈடேற அருளது புரிந்தாய்
பாதியாய் அந்தணனின் பாலனனை இரண்டாய்
பாவையரே நீ கிழித்தே யங்கெறிந்தாய்
காதினிலே குரலோசை கேளாதிருந்தாய்
கன பொங்கள் பூசை மடை வாங்கி நீ யிரந்தாய்
பாதிபதி சூடு பரன் பந்தல் முன்னிருந்தாய்
பாலனெனை ஆண்டருள்வாய் காளியென் தாயே.

3. இந்த உலகந் தன்னிலுள்ள மங்கையர்கள்
இடு மஞ்சள் காவிவகை பூசியுன்முன்பு
சிந்தை துணிந்து சிவப்புப் பட்டாடை
சேரவே பச்சையு மணிந்த வர்கள் வந்தால்
விந்தையிது தானெனவே நீ யவர்கள் மீது
வேடிக்கை பார்ப்போமென வேதனையிட்டாய்
இந்தவகை என்மீது செய்யாதேயம்மா
எளியனெனை ஆண்டருள்வாய் காளியென் தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஈரமென முழுகுதலை கூந்தல் முடியாமல்
ஏதியே யாவுகப் பெண்ணுனது வாசல்
தீரமுடன் தாவிவர அயலவர்கள் கண்டு
தீங்கேதும் அணுகுமடி கூந்தல் முடியென்ன
வீரமுடன் கேளாமல் உன்வாசல் பார்த்து வர
விரைகின்ற வேளை நீயவளையன்னேரம்
சீரறச் சென்னி யோர் பக்கமது வைத்தாய்
செல்வியே தேடரிய காளியென் தாயே

5. உற்றவினையாலே யவள் மெத்தவுங் கலங்கி
உலக பிணியிது என்றே பலவகை புரிந்தும்
குற்றமதால் வந்த வினை என்று நினையாமல்
கோதையவள் படுமவதி பார்த்து நீ யிரங்கி
சுற்ற மனமாகியவள் முன் போகி நின்று
தோகையே நாளைஎன் சந்நிதியில் வந்து
முற்றமுடி வெட்டி நீயென் சிரசுக்கீந்தால்
மோதுபிணி தீருமென மொழிந்தாய் யென்தாயே

6. ஊரவர்கள் அறிய இவள் விடியவுமெழுந்து
ஓதரிய உன்னுடைய சந்நிதியில் வந்து
கூரரிய கத்தரிக்கோல் கையில் கொண்டு
கோதை தன் கூந்தல் தனை வெட்டியுனக்கீந்து
பூரஒளி பரவலே சாம்பிராணிவாடை
புகையெங்கும் வீசிவரப் பூவைபிணி தீர்ந்து
ஊரறிய மகிழ்வோடு தன்மனை செலவிலை யோ
குற்றமே பொறுத்தெனை யாழ் காளியென் தாயே.

7. எண்ணரிய புலமை பல செய்தவள் நீயல்லோ
ஏழைகளின் துயர் நீக்கி யாழ்பவள் நீயல்லோ
வெண்ணையுண்டோனுக் கிழையவள் நீயல்லோ
வேங்கை மரமாய் நின்ற வேலவர் தாயல்லோ
பெண்ணெனவே பூவுலகில் வந்தவள் நீயல்லோ
பேசரிய கோதாரி தீர்த்தவள் நீயல்லோ
தென்கோண வாழயென வந்தவள் நீயல்லோ
செல்வியே தேடரிய காளி யென் தாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஏகமுமே ஒளியாகி நின்றவள் நீயம்மா
ஈசனொடு வாதாட வல்லவள் நீயம்மா
வேகமொடு சிங்கமதில் ஏறியே நீயம்மா
வினை தீர்க்க வந்தவள் நீயம்மா
தேகமதில் நோய் பிணி தீர்ப்பவள் நீயம்மா
தேவர் தமைச் சிறை மீட்ட செல்வி நீயம்மா
மேகமெனும் குடை நிழலில் வீற்றவள் நீயம்மா
மேதினியி லெமை யாள வந்த காளித்தாயே.

9. ஐயனார் பரிகலத்தலைவி வேறுண்டோ
ஆடிலகு காடேறியானவள் வேறுண்டோ
மையான மீதில் நடனம் புரிந்தவள் வேறுண்டோ
மலையரசன் மகளாய் முன்வந்த வேறுண்டோ
வையகம் தன்னிலெனக்கெவரு முண்டோ
வருமை நோய் பிணிதீர்க்க வேறொருவருண்டோ
தையலே உனை நம்பி தாழடி பணிந்தேன்
தாபரித் தெனை யாள வரு காளித் தாயே.

10. ஒப்பரிய தாயே நீ வாவா சிவாயநம
எப்பொழுதும் நான் மறவேன் வாவா சிவாயநம
தொப்பை வயிரோனின் தாயே வாவா சிவாயநம
தொல்லை துயர் பிணி தீர்க்க வாவா சிவாயநம
வொப்பெறிய தேர் ஏறி வாவா சிவாயநம
ஓசையென் மொழி கேட்க வாவா சிவாயநம
கொப்பை நகை அணிமாதே வாவா சிவாயநம
கோணை நகர் தமை ஆளும் காளியென் தாயே.

11. ஓதுவேன் உன்புகழ் உனக் கோலம் ஓலம்
ஒன்றுமறியாதவன் உனக் கோலம் ஓலம்
சோதி ஒளி யானவள் உனக் கோலம் ஓலம்
சுந்தரியே தாயே உனக் கோலம் ஓலம்
மோதிவரு பிணிதீர் உனக் கோலம் ஓலம்
முன் பகைஞர் தமைவதைசெய் உனக்கோலம் ஓலம்
சோதி குமுளணிந்தாய் உனக் கோலம் ஓலம்
குலலையமே எமையாளு காளியென் தாயே.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. ஔவரசன் தம் மோடமர் பொருதி நின்று
அன்பாக ஒன்பதாம் நாளவனை வென்றாய்
கௌவி வரு அசுரர் தமை வேரோடறுத்தாய்
கடியதோர் தேவர்சிறை தம்மையும் மீட்டாய்
சௌவுரிய முனைப் போல வேறொருவருண்டோ
சாற்று மொழி உன் செவி கேட்கவையோ அம்மா
மௌவுனமொடு உனை நிதமு மலரடி பணிந்தேன்
அகமகிழ இது தருணம் அருள் காளித் தாயே.

13. அஃக்கிரக மாகி உனை நினையாத போருக்கு
அதிக பிணி பல கவலை அடையவே நீவைப்பாய்
தக்கதெனவே உனது சரணமடைந்தோரை
தாபரித்தே கவலை பிணி தீர்த்து வைப்பாய்
மக்கள்மனை மகிழ வென நத்தியே செந்தமிழால்
நாடியே வேற்பிள்ளை காவியமுரைத்தேன்
சக்கரம் தண்டு வாள் பரிச முடையவளே
சக்தியே உலகு புகழ் காளியென் தாயே.

- சுபம் -


அட்சரம்

## பத்திர காளி மந்திரம்

**கா.வெட்டு தெ.ஆ**

ஓம் பத்திரகாளி அம்மே ஆங்காரமுள்ள நாச்சி வெண்கண் சிவந்து வெடிவால் முறுக்கி அங்கம் பிளந்து வா ஆகாசம் பிளந்து வா அம்மே உமை அம்மே (கண்ணால் அச்சரமிட்டு) ஆலந்திரும்பி ஆனம் திரும்பி சூலம் திரும்பி சுடுகாடு திரும்பி சுடுகாட்டில் வாழும் பேய் திரும்பி என் கை திரும்பி வைத்த விளக்கேற்றி வரவே சுவாகா. ஓம் கிறாங் கிறாங் ஓம் தாங் ஓம் கிஷ சூரபத்திராணை பிடி பிடி மா சூரத்தை வதை வதைத்த வல்லானே கடித்து கடுகனெ வாவா கிடு கிடுத்தானே வாவா பரிமள சுகந்தனே வாவா பின்னும் மின்னும் பரிசினங்கள் சிறுமலையானே வாவா படைத்தவனே படைத்தவளே பாரம் எரிய தாக்கு படம் எரிய தாக்கு தாக்கு தண்ட வாள்முறுக்கிய தகப்பனே தாக்கு தாக்கு எத்தி எத்தி கூட்டமிடு சுடுகாடு நடுவோர் ஆல விருச்சம் ஆலவிருச்சத்தின் மேலே முளைத்த சக்கரத்தை வாங்கி ஓதி எறிய சர்வ சத்துருக்களையும் அறு அறு கொம்பு கொண்டு குத்து குத்து குருகுலமிட்டு உச்சாடு உச்சாடு உச்சாடு நொந்து நொந்து இறுக்கு இறுக்கு மூசு மூசு பேசு பேசு எட்டெட்டு பழுவிலும் குத்து குத்து அம்மியில் வைத்து கட்டி இறுக்கி வெள்ளானை கம்பிளி கயிற்றினாலே சேர்த்து இறுக்கி அனுமந்தா கட்டி இருந்தால் எழுநூற்று காதவளிக் கோட்டையை சுட்டு பரப்புவேன். தொட்டா பிறை தோட்டாளி அங்கு இங்கு தோடாலி இலங்கனாச்சி யேறு பேறு பேசு பேசு பெருமாளே பேசு பேசு சுவாகா இந்தா தடையற முறியவே சுவாகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காளியம்மன் தாலாட்டு

1. வாற பவனி என்ன பத்திரகாளி நீ - அம்மா
வந்திரங்கும் நேர்மை என்ன வீரம்மா காளி

2. சிங்கவாகனமேறி வடபத்திரகாளி - அம்மா
செங்கைவளை தானலம் வீரம்மாகாளி

3. பட்டுப் பள பளனெனப் வடபத்திரகாளி - அம்மா
பறந்தோடி வாருமம்மா வீரம்மாகாளி

4. ஏறிட்டபார்வையுடன் வடபத்திரகாளி - அம்மா
எழுந்தோடி வாருமம்மா வீரம்மா காளி

5. சடையை விரித்தாவாம் வீரம்மா காளி - அம்மா
சத்துருவை வேரருப்பாள் வடபத்திரகாளி

6. கடைவாய் இரண்டினிலும் வீரம்மா காளி - அம்மா
கக்குதம்மா செங்குருதி வடபத்திரகாளி

7. எத்திசையும் தான் மதிக்க வீரம்மா காளி - அம்மா
எங்களம்மை வாராவாம் வடபத்திரகாளி

8. இரத்தப் பெலி அருந்தும் வீரம்மா காளி - தாயார்
இரணங்க வீரியம்மா வடபத்திரகாளி

9. ஓக்கப் பெலி அருந்த வீரம்மா காளி - அம்மா
ஓடிவர வேணுமம்மா வடபத்திரகாளி

10. கக்கக் குருதிவெள்ளம் வீரம்மா காளி - தாயார்
கையினிலெ திறி சூலம் வடபத்திரகாளி

11. சமுகாடுறை கழற்றி வீரம்மாகாளி - தாயார்
சாம்பிராணி தூபமிட்டாள் வடபத்திரகாளி

12. பெலி ஆடு கோழிகளை வீரம்மா காளி - தாயார்
பிளந்துதிரம் மேகுடிப்பாள் வடபத்திரகாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. அரனுடனே வாதாடும் வீரம்மாகாளி - தாயார்
அக்கினியோ வுன் சொருபம் வடபத்திரகாளி

14. கொள்ளி வட்ட கண்ணுடையாள் நீ வீரம்மாகாளி - தாயார்
குதித்தோடி வாருமம்மா வடபத்திரகாளி

15. பூசைக்கு போகவென்று வீரம்மாகாளி - தாயார்
புறப்பட்டுவாராவாம் வடபத்திரகாளி

16. கெங்கை அரட்டியல்லோ வீரம்மாகாளி - தாயார்
கெறுவிதமாய் பூசைபண்ணி வீரம்மா காளி

17. அலை கடல் போல் திருநீறு வீரம்மா காளி - தாயார்
அணியப்பிறந்தவளாம் வீரம்மா காளி

18. அம்மா அணிந்த திருநீற்றழகு வீரம்மாகாளி - தாயார்
அண்டரெண்டம் தான் மதிக்கும் வடபத்திரகாளி

19. அம்மா வாராவாம் வாராவாம் வீரம்மாகாளி - தாயார்
மதம் பெரிய பூசையிலே வடபத்திரகாளி

20. அம்மா சங்கு முழங்குதம்மா வீரம்மா காளி தாயார்
சாம்பிராணி வீசுதம்மா வடபத்திரகாளி

21. பூசைக்கு போகவென்று வீரபத்திரகாளி தாயார்
புறப்பட்டு வாருமம்மா வடபத்திரகாளி

22. அம்மா கொக்கரித்த சத்தமுடன் வீரம்மாகாளி தாயார்
குதித்தோடி வாருமம்மா வடபத்திராளி

23. அம்மா செக்கச் சிவப்பியரே வீரம்மாகாளி தாயார்
செங்குருதிதான் குடிப்பாய் வடபத்திரகாளி

24. அம்மா சிவனுடனே வாதாடும் வீரம்மாகாளி தாயார்
செங்கண்ணன் தங்கையரே வடபத்திரகாளி

25. தக்கநிறையாக மதை வடபத்திரகாளி தாயார்
தானழிக்க வேணுமென்றாய் வடபத்திரகாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ( வேறு )

அம்மா அம்மா ஆங்காரம் எங்கே அம்மா
என்தாயே நரசிங்க காளி உன்
அதி கோபம் தாறு மெங்கே

அம்மா அம்மா உந்தனிட கோபமெங்கே
என்தாயே அகோரி காளி நீ
ஓடிவர வேணுமம்மா

அம்மா அம்மா கோபம் பொறு கிலையோ
என்தாயே அகோர காளி உன்
கொடி முடிகள் பத்தலையோ

அம்மா அம்மா கண்ணும் சிவக்கலயோ
என் தாயோ அகோரகாளி உன்
காந்த மலர் கையிலையோ

அம்மா அம்மா சிங்கப்பல் செஞ்சடையும்
என் தாயே அகோர காளி உன்
திறி சூலம் கையிலையோ

அம்மா அம்மா கோடாலிப் பல்லழகி
என்தாயே அகோரகாளி
குதித்தோடி வாருமம்மா

அம்மா அம்மா வாராவாம் வாராவாம்
என்தாயே அகோரகாளி
வாணன்னாக மத்தலத்தில்

அம்மா அம்மா ஓசை முழங்குதம்மா
என்தாயே நரசிங்க காளி
ஓடிவர வேணுமம்மா

அம்மா அம்மா வினை தீர்க்க வேணுமென்று
என்தாயே நரசிங்க காளி
வெண்ணீறு தாளெடுத்தாள்

அம்மா அம்மா ஆதிசிவ பூசை பண்ணி
என்தாயே நரசிங்க காளி நீ
அனுட்டாங்கம் தான் முடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா அம்மா மலர் மேல் மலரெடுத்து
என்தாயே அகோர காளி நீ
வந்து சிவ பூசை பண்ணாய்

அம்மா அம்மா வெள்ளை மலர் தானெடுத்து
என்தாயே நரசிங்க காளி நீ
விநாயகரைப் பூசை பண்ணாய்

அம்மா அம்மா காந்தமலர் தானெடுத்து
என்தாயே அகோர காளி நீ
கணபதியைப் பூசை பண்ணாய்

அம்மா அம்மா சிவந்த மலர் தானெடுத்து
என்தாயே நரசிங்க காளி நீ
சிவனாரைப் பூசை பண்ணாய்

அம்மா அம்மா காலிற் சிலம்பசைய
என் தாயே அகோர காளி நீ
கைதனிலே வாள்ளேந்தி

அம்மா அம்மா ஆலயத்தில் வந்திருந்து
என்தாயே நரசிங்க காளி நீ
ஆனவரம் தான் கொடுப்பாய்

அம்மா அம்மா குடிப்பாவாம் சாராயம்
என்தாயே வீரம்மாகாளி நீ
கொப்பளிப்பாய் வெள்ளரக்கு

அம்மா அம்மா அத்தி மலரெடுத்து
என்தாயே வடபத்திர காளி நீ
அரன் பூசைதான் முடித்தாய்

அம்மா அம்மா தோத்திரங்கள் செய்திடுவாள்
என்தாயே வீரம்மா காளி தாயார்
தொல்வினைகள் தீர்த்திடுவாள்

அம்மா அம்மா சரணம் சரணமம்மா
என்தாயே வீரம்மா காளி உன்
இருதாழ் மலர்கள் சரணமம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வேறு)

பெற்றவளே என்தாயே பத்திரகாளி - அம்மா
பேரசிவாருமம்மா வீபத்திரகாளி

உற்றகுல தெய்வமம்மா பத்திரகாளி - தாயே
ஓடிவரவேணுமம்மா வீரபத்திரகாளி

வைகைஎனும் பொய்கையிலே வீரபத்திரகாளி - தாயே
வண்ணமகள் தான் முழுகி பத்திரகாளி

கூந்தல் சடை உலர்த்தி வீரபத்திரகாளி - தாயே
குங்குமம் பூ எண்ணைஇட்டு பத்திரகாளி

நெற்றியிலெ நீறணிந்து வீரபத்திரகாளி - தாயே
நிலவு போல் பொட்டுமிட்டு பத்திரகாளி

மஞ்சலுடன் கஸ்தூரி வீரபத்திரகாளி - தாயே
மணக்குதடி மேணியிலே பத்திரகாளி

பட்டுத்தி சட்டையிட்டு வீரபத்திரகாளி - தாயார்
பாதக்கொலுசியிட்டு பத்திரகாளி

பட்டு நல்ல பட்டு அம்மா வீரபத்திரகாளி - தாயார்
காஞ்சிபுரப் பட்டு அல்லோ பத்திரகாளி

காப்பணிந்து மிஞ்சியிட்டு வீரபத்திரகாளி - தாயார்
கையில் சிலம்பணிந்து பத்திரகாளி

பூரித்து ஆலித்து வீரபத்திரகாளி - தாயார்
புறப்பட்டு வாராவாம் பத்திரகாளி

வாறபவனி என்ன வீரபத்திரகாளி - தாயார்
வந்திறங்கும் நேர்மை என்ன பத்திரகாளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரமும் கைப்பிடித்து வீரபத்திரகாளி - தாயார்
பத்தினியும் வாராவாம் பத்திரகாளி

பூசை நல்ல பூசையம்மா வீரபத்திரகாளி - தாயே
புனர் பூசை ஆகுதம்மா பத்திரகாளி

பூசைக்கு போக வெற்றுவீர பத்திரகாளி - தாயார்
புறப்பட்டு வாராவாம் பத்திரகாளி

ஆருடைய பூசை என்று வீரபத்திரகாளி - தாயார்
அங்கே நின்று லாவாதே பத்திரகாளி

ஆற்றுமணலெடுத்து வீரபத்திகாளி - தாயும்
அரனாரைப் பூசை பண்ணி பத்திரகாளி

வெள்ளை மலரெடுட்டு வீரபத்திரகாளி - தாயும்
வினாயகரைப் பூசை பண்ணி பத்திரகாளி

ஆலாத்தி ஆலாத்தி வீரபத்திரகாளி - தாயே
கற்பூர ஆலாத்தி பத்திரகாளி

ஆலாத்திக் கன்னியர்கள் வீரபத்திரகாளி - தாயே
ஆயிரம் பேர் சூழ்ந்து வர வடபத்திரகாளி

சிங்காசனம் மீதேறி வீரபத்திரகாளி - தாயும்
தேவியரும் தானிருந்தாள் பத்திரகாளி

சரணம் சரணமம்மா வீரபத்திரகாளி - தாயே
தாழ்யிணையே தான் சரணம் பத்திரகாளி

பத்தினியே உத்தமியே பத்திர காளி அம்மா
பார்வதியுன் தாழ் சரணமம்மா

சுபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காளியம்மன் காய்வெட்டுகள்

ஓம் ஏறடி ஏறடி எதிரேறடி காமக் கோலம் கபால பாத்திரமும் நீண்ட சடையும் நெருப்பெறிந்த முகமும் ஒற்றைத்தோடும் ஒருகையில் சூழமும் இருகடவாயில் இரத்த வாடையும் சேத்து மிதித்து தான்திறந்தோடிவா வங்க வங்க வடபத்திரகாளி பாஞ்சி றாஞ்சடி பாரப்பெலி எடு ஆ.யீ - அண்டம் பிழந்து வா ஆகாசம் பிழந்து வா பூமி கிழித்து வா பூலோகம் கிழித்து வா தனதனத்த சிறிவாள சுந்தரி பெலி எடு பெலிஎடு பேதம் எண்ணாதே பொய்சொல்லாதே தாமதம் இல்லாமல் தடை பிறண்டோடி வாகாளி வெள்ளியங்கிரி மலை விடிந்து வெண்சாவல் கூவுது தேரேறிவா சிங்ஙவாகினி வங்ங வங்ங வடபதிரகாளி சீக்கிரம் தடையர முறிய வேசுவாகா

ஓம் வடிவுறு பச்சையும் மரகத மேனியும் சிரித்த வாயும் சிங்கப்பல்லும் காலில் ஓலையும் கலுத்தில் மாங்கல்யமும் முத்தாபரணமும் கிளைத்த மருங்கில் பட்டு உடையும் தங்கத்தாமரையும் பூதப்படையுமாக என்னம்மா வடபத்திரகாளி நீவந்து முன்னிக்க வேசுவாகா நானடியேன் எதிர்ப்போரை நடுங்கிப்பிடித்து சித்தடியேன் பேய்களை சிதையில் கலக்கி அண்டம் பிரண்டுவா ஆகாசம் பிரண்டுவா பூமியிரண்டு பூலோகம் பிரண்டுவா எட்டுத்திக்கு பதினாறுகோணமும் ஆங்கார முள்ளவளே ஆவேச முள்ளவளே நெஞ்சடையும் கருஞ்சடையுமுள்ளவளே சீக்கிரம் வடபத்திரகாளி அறு அறு தெறி தெறி அக்கினி சங்காரத்தினாலே அறுபட்டு தெறிபட்டுப் போகவேசுவாகா.

## இயமன் வெட்டு

ஓம் ஆம் உம் நம் சிவ் உங்ங வங்ங றிங்ஙா வாவா கபால கபால தெண்டயிதா தட்சனா என் சத்துரு உயிர் பதற இடி இடி இயமா அம் நம் இல் உல் இவர் மீதில் ஏவல் பில்லி வஞ்சகனைக் கஞ்சா தே அவன் பெலிக்கு இணங்காதே அவன் கட்டுக்கு நில்லாதே ஆவேசு ஆவேசு ஆதிசிவன் உன்னை எரித்தால் போலே அவனை எரி எரி பிடி பிடி சுடு சுடு அல் அல் ஆணை அறு அறு ஆறுமுகனானை மூடு மூடு மும்மூர்த்தி ஆணை எரி எரி இளைய பெருமாளானை அசி அசி ரசி சித்த சங்கார பாசம் கொண்டு தாக்கு தாக்கு தர்மர் ஆணை இத்தடையது முறியவே சுவாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாகாளி அம்மனின்

# சிறப்புக் கும்மி

*திருச்சிற்றம்பலம்*

தந்தனத் தான தன தான தன
தான தந்தனத் தனா னா
தந்தனத் தான தன தான தன
தான தந்தனத் தானா னா

## கும்மி

1. கஜமுகனே கணநாயகனே சிவ
காரணச் செல்வக் கணபயே
குணமுடன் கும்மிக்கு முனினிற்க வாருமென்
குஞ்சரக்கன்றே குணாநிதியே

2. வெள்ளை மலருறை வித்தகியே விரல்
மீட்டும் யாழ்ளுடைக் கையாளே
அள்ளக்குறையாக் கவி மழைதந்நருள்
ஆரணங்கே கலை மாமகளே

3. மாமகள் வள்ளிக்கு நாயகனே தெய்வ
யானையின் யோடுறை வேலவனே
தேமதுரத் தமிழ் சொல்லழகா - மயில்
தித்தித்தா நடமாட வாருமையா

4. வாருமையா கண்ணா வெங்கடேசா தேவி
மாகாளி மேற் கும்மி பாடுதற்கு
நீயே துணை புரிந்தாண்டிடுவாய் இடையர்
நெய் தயிர் பால் அன்னம் உண்டவனே

5. உண்டவனே அமிர்தம் தின்றவனே விஷம்
உமை தடு நீல கண்டன் ஆனவனே
அண்டர் முனிவர் துதித்தவனே உமை
அர்த்தனார் ஈஸ்பரமானவனே

6. ஈஸ்பரியாள் உமை என்றும் பராசக்தி
தேவி என்னம்மை காளிக்கீடேது
மாதரசி மங்கை காளி வருகிற
வரவைப்பாரடி தோழியரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. பாரடி அன்னை சிலை அழகை அது
பற்றரை மாற்றுயர் தங்கமடி
காரடி அம்மா எனப் பணிந்தால் காளி
கடைக்கண்பார்த்து அருள்தருவாள்

8. அருள் கொடுத்திடும் அம்மையடி காளி
அத்தனைக்கும் தாய் முன்னவள் தான்
இருள் அகற்றிடு ஞான ஒளி எங்கள்
இஸ்டகுல தெய்வம் நங்கையரே

9. நங்கையரே கும்மி கொட்டுங்கடி மாயன்
தங்கையராம் எங்கள் அன்னையடி
பங்கையச் செல்வி மா காளி வாற
பவுசைப் பாரடி தோழியரே

10. பாரடி அன்னையும் ஓடிவாறாள் கையில்
பத்திரக் கொத்தோடு ஆடிவாறாள்
ஈரடி தாழமும் இட்டுவாறாள் காளி
ஈசன் இடப்பாகம் விட்டுவாராள்

11. விட்டுவாறாள் கடல் மஞ்சல் குளித்திட
வீரம்மாகாளியுமாடிவாறாள்
கட்டுண்ட தெய்வங்கள் ஆய் எனக் கூவிட
கை தனில் வாளதால் வெட்டிவாறாள்

12. வெட்டிப் பெலி தனை உண்டவளாம் காளி
வெண்தணல் மீது நடந்தவளாம்
துட்டரை சண்டாளப் பாதகரை அம்மை
துரத்தி சங்காரம் செய்தவளாம்

13. சங்காரி ஓங்காரி ஆங்காரி நீலி
சமையபுரத்து றீங்காரி
வங்காளி மாதங்கி அங்காளி மாரி
வடபத்திரகாளியே மாகாளி

14. மாகாளி செங்காளி வண்ணத்துரைமகள்
மாயன் சகோதரி ஆனவளே
ஆகாயக்காளி அகோர கௌரி காளி
அம்மை வருவதைப் பாருங்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. அம்மைக் கெதிரே நிறை குடமாம் பக்தத்
தரிகில் கும்பம் ஒளிவீசும்
செம்மையாய் பொங்கலும் வெற்றிலை பால் பழம்
தீவினை போக்கும் மா பாணக்கமும்

16. பாணக்கம் அள்ளி பகுந்தழிப்பாள் காளி
பாரினில் வெவ்வினை கொன்றொழிப்பாள்
ஆணவக்காரர் சதிகேடர் தங்களை
அன்னை பகவதி ஆட்டிவைப்பாள்

17. ஆட்டிவைப்பாள் தூணில் நாட்டிவைப்பாள் காளி
ஆரும் தெரியாது காட்டில் வைப்பாள்
வாட்டிவைப்பாள் தன்னை வணங்கும் அடியார்க்கு
வரமும் செல்வமும் வந்தளிப்பாள்

18. அளியாச் செல்லமும் தந்திடுவாள் வீரி
அம்மை பகவதியைத் தொழுதால்
இளைய கன்னிகாள் வாருங்கடி அம்மை
இயல்பைச் சொல்லுறேன் கேளுங்கடி

19. சிவனுக்கருகில் இருக்கையிலே உமை
தேவர்கள் ஐயனைத் தெண்டனிட்டு
உனக்கபயமே மா தேவா எங்களை
ஓடிவந்து காரும் சங்கரனே

20. சங்கரன் என்றனர் நன்றெனவே சிவன்
சென்றென அன்னையை தான் பார்க்க
குன்றெனப் பொங்கும் அகோர முகத்துடன்
குதித்தனள் காளியும் வாளுடனே

21. வாளது வீசி தலைஉருளச் சேனை
மட்டில்லா அசுரர் படைவீள
தூளிகள் ரெத்தம் குடித்து வரக்காளி
சூரன் மகிடனை கொன்றனளே

22. கொன்றனள் துற்கையும் அசுரர் படைதனை
கூவியிட்டு அன்னையும் கொக்கரித்து
நன்றென வென் சாம்பல் அள்ளி உடல் பூசி
நடுச்சுடலையில் ஆடினளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23. ஆடினாள் ஆடினாள் ஆடினாள் காளியும்
அண்டசராசரம் ஆடினதே
தேடினாள் நல்ல கங்கைக் கரை யோரம்
தேவியும் நற்றவம் செய்தனளே

24. நற்றவம் பெற்ற மகமாரி காளி
நானிலம் போற்றும் சிவகாமி
பொற்பதம் போற்றினோம் காமாட்சி தாயே
பொன் பொருள் தந்தருள் மீனாட்சி

25. மீனாட்சி விசாலாட்சி கடல்நாச்சி வீரி
மேதினி போறிறிடும் பார்வதியே
ஆலாலமுண்டோன் இடப்பாகம் பெற்றிடும்
அம்மை பகவதி கல்யாணி

26. கல்யாணி காகுந்தன் தங்கையரே அம்மா
காளி கா சூலி கபாலியரே
வல்லவி பைரவி பயங்கரி மாதங்கி
வந்து எளுந்தாடும் பேச்சியம்மா

27. பேசிசியம்மா உந்தன் ஆட்சியம்மா வையம்
பேர்பெற்ற வீரம்மா காளியம்மா
நீலியம்மா புலவன் மூர்த்தியின் பாடலை
நீயேதான் முன்னின்று ஏத்திடம்மா

28. ஏற்றிடம்மா பூசை பூசகர் பூமரம்
என்னம்மை மாதா உனக்கபயம்
காத்திடம்மா அட்டதிக்குகள் கெங்கணும்
கப்புமுறியாது பார்த்திடம்மா

29. பார்த்திடவென் நோய் பறந்தோடும் காச்சல்
பக்கப்பிடிப்பு தலைவலியும்
வேர்ந்திடும் வெண்குஸ்டம் கண்டக்கரப்பானும்
வீங்கிடும் நோவுடன் வெண்விறைப்பும்

30. வென்தனல் கொண்ட எரிபிளவை ஈளை
விக்களும் கக்கல் கிறுகிறுப்பு
அந்தரமான மூச்சி இளுவையும் கொடிய
அம்மையும் சின்னம்மை கண்வலியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

31. கண்மாலை செம்மாலை காதுவலி புது
காணாவியாதிகள் எத்தனையோ
உன்னை அளைத்திடும் பிள்ளைப் பெறுநோவும்
ஊடதும் வயிறு பெருவலியும்

32. வலிகள் வாதைகள் வந்தணுகாது கார்
மாதாவே உந்தனை மண்டாடினோம்
பழிகாரி காளியே பங்கயச் செல்வியே
பாலகர் எங்களைக் காருமம்மா

33. காருமம்மா தேவி வீரம்மா காளியே
காகுந்தன் தங்கையரே சரணம்
பாருமம்மா வடபத்திர காளி உன்
பாதம் சரணம் சரணமம்மா

34. சரணமங்களம் மங்களமாம் தாயார்க்கு
சர்வ மங்களம் மங்களமாம்
பர்வ தராசன் மகளான சக்தி
பார்வதி அன்னைக்கு மங்களமாம்

35. மங்களம் மங்களம் மங்களம் சிவ
மாரிதேவிக்கும் மங்களமாம்
எங்கும் நிரைதிரு ஈஸ்பரி காளிக்கும்
என்தென்றும் பல்லாண்டு மங்களமாம்

*மங்களம் சுபசோபன மங்கம்*
*காளியம்மன் சிறப்புக் கும்மி*
*- முற்றிற்று -*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் நா. விநாயகமூர்த்தி அவர்களின்
# இதர வெளியீடுகள்



ஆக்க தொகுப்பு நூல்கள்:

| | |
|---|---|
| குலதெய்வ வழிபாட்டுப் பாடல்கள் | 380.00 |
| வராகி மாலை | 385.00 |
| மாரியம்மன் குளுத்திப்பாடல் | 135.00 |
| பேச்சியம்மன் காவியப்பாடல் | 140.00 |
| மீனாட்சியம்மன் அருட் பாடல் | 135.00 |
| நாகம்மை புகழ் மாலை | 130.00 |
| கடல் நாச்சியம்மன் | 140.00 |
| கண்ணகை அம்மன் | 165.00 |
| வயிரவர் காவியப் பாடல் | 130.00 |
| சிவமுத்து மணி மாலை | 185.00 |
| காளியம்மன் காவியம் கும்மிப் பாடல் | 185.00 |

**மேற்படி நூல்கள் தேவையானோர் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு பெறமுடியும்**

ஈஸ்வரி இல்லம்
மாரியம்மன் கோயில் வீதி, சேனைக்குடியிருப்பு–01B.
077–6538667

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org